Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

நாம், நம்மை முழுவதுமாகக் கர்த்தருக்கு
ஒப்புக்கொடுக்கும்போது,
அவருடைய தேவைகளையும், வாஞ்சைகளையும்
நம் உள்ளத்தில் வைக்கிறார்.

நமது சுய விருப்பு, வெறுப்புகள் போகவேண்டும்.
அப்பொழுதுதான் கர்த்தருடைய ஆவியானவரால்
நம்மோடு தொடர்புகொள்ள முடியும்.

நமது சூழ்நிலைகளுக்கேற்ப,
அந்த மேற்கொள்ளும்படியான
ஆலோசனைகளையும், வழிகளையும்
கொடுத்துக்கொண்டுதானிருக்கிறார்.

அவர், நம்முடன் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்,
நாம்தான் கேட்பதற்கு ஆயத்தப்பட வேண்டும்.

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒலி எக்காளம்

VOL . 4 ISSUE . 1 தனிப்பிரதி ரூ 20/= ஆகஸ்டு 2010

தேவன்
பெருமையுள்ளவர்களுக்கு
எதிர்த்து நிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ
கிருபையளிக்கிறார்

— யாக்கோபு 4:6




பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

- யாக்கோபு 4:6

தன்னைத்தானே உயர்வாக நினைத்து பெருமைப்படுகிறவர்களுக்கும், மற்றவர்களை விடத் தான் மேலானவர் என்ற எண்ணம் உடையவர்களுக்கும் தேவனே எதிராக இருக்கிறார். ஆனால், மனத்தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையை வழங்குகிறார். பெருமை மற்றவர்களை பற்றி சிந்திக்க வைக்காமல், தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்க வைக்கிறது. பெருமையானது நாம் பார்க்கிறதை, கற்பனை செய்கிறதை நமக்கு உரிமையாக்கிக் கொள்ளும்படியான தீர்மானத்துக்கு நேராக நம்மை வழிநடத்தும் ஒன்றன் மீதான அதிக நாட்டத்தால், தேவைக்கும் அதிகமான பேராசையை உண்டாக்கும். பெருமை சண்டை வரக் காரணமாயிருக்கிறது. பெருமையுள்ளவர்கள் கர்த்தரையும், இக்கட்டான வேளையில் தங்களுக்கு உதவி செய்தவர்களையும் மறந்து விடுவார்கள். அதைச் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்த மாட்டார்கள் பெருமையுள்ளவர்கள் சுயநலமுள்ளவர்களாக, மற்றவர்களின் நலத்தைக் குறித்து கொஞ்சமும் அக்கரையில்லாதவர்களாக, தாங்கள் மாத்திரம் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். மற்றவர்களை கஷ்டப்படுத்தி காரியங்களை நடப்பிப்பார்கள்.

நம்மைப்பற்றி மட்டுமே சிந்திக்கிற சிந்தனையிலிருந்து சுய ஆசையிலிருந்து நாம் வெளியே வரவேண்டுமானால் நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்த வேண்டும். தேவனிடமிருந்துதான் சகல நன்மைகளும், ஆசீர்வாதங்களும், உண்மையான அங்கீகாரமும் வரவேண்டும் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆவியானவரால் நாம் நிரப்பப்படும் போது இந்த உலக கவர்ச்சி இந்த உலகத்தின் மீதுள்ள பற்று எல்லாம் குறைந்து போகும். ஆண்டவர் கொடுக்கும் இந்த ஆசீர்வாதத்திற்கு நிகர் எதுவுமில்லை. தாழ்மையுள்ளவர்கள் தங்களுடைய மேன்மை கர்த்தரிடமிருந்து மட்டும்தான் வரும் என்பதை உணர்ந்து கொள்வார்கள். தாழ்மையோடு இருப்பது என்பது, நம்முடைய சுயமான முயற்சியை விட்டுவிட்டு, கர்த்தருடைய வழிநடத்துதலின்படி முழுமையாக அவருடைய ஆளுகைக்குள்ளாக அர்ப்பணிப்பது, தகுதியில்லாத நம்மை அவர் தகுதிபடுத்தி, அவருடைய அன்பை நமக்கு கொடுத்து நம்மை பொறுப்புணர்வுள்ளவர்களாக, எல்லோரும் மதிக்கும் வண்ணமாக பரிபூரணமுள்ளவர்களாக மாற்றுகிறார்.

கர்த்தர், பெருமையுள்ளவர்களின் திட்டங்களையும், கருத்துக்களையும் தடை செய்து விடுகிறார். ஆதலால், நாம் எந்த சூழ்நிலையிலும் பெருமை நமக்குள் வராதபடி,



தேவன் நமக்கு எதிராக இராதபடி நம்மை காத்துக் கொள்வோம். சிலர் பணம் படைத்தவர்களாக இருப்பதினிமித்தம் மிகுந்த பெருமையோடிப்பார்கள். சிலர் உயர்ந்த பதவியிலிருப்பதாலும், தாலந்துகள், திறமைகள் உள்ளவர்களாக இருப்பதனாலும், அநேக காரியங்களை அறிந்து வைத்திருப்பதாலும் பெருமையோடிப்பார்கள். சிலர் தங்கள் ஜாதியைக் குறித்தும், அவர்கள் படித்த படிப்பைக் குறித்தும், அவர்களது சாதனைகளைக்குறித்தும், சமுதாயத்தில் அவர்களுக்கு உள்ள செல்வாக்கைக் குறித்தும், பதவியில் அவர்களுக்கு இருக்கிற பொறுப்பைக் குறித்தும் சிலர் தங்கள் பிள்ளைகளைக் குறித்தும் பெருமை பேசிக் கொண்டிருப்பார்கள். சிலர் பிரபலமானவர்கள் தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். நண்பர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். சிலர் தங்கள் வீட்டைக் குறித்தும், தங்களது சொத்துக்களைக் குறித்தும், தங்களைக் குறித்தும், எப்பொழுதும் பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். ''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்'' என்ற வார்த்தையின்படி, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை வைத்தே அவர்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள்: பிதா தம்முடைய கையில்எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தார் என்பதையும் அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதையும் அறிந்திருந்தும் அவர் தாழ்மையோடுகூட நடந்து கொண்டார். அவர் தம்முடைய சீஷர்களின் கால்களை கழுவினதன் மூலம் தன்தாழ்மையை காண்பித்தார். ஆண்டவரும், போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவின துண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் (யோவான் 13:14) என்றார்.



நாம் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், பல பொறுப்புகளை உடையவர்களாக இருந்தாலும் நிறைய படித்தவர்களாக இருந்தாலும் பெருமை கொள்ளாமல், இயேசு கிறிஸ்துவின் தாழ்மை நம்மிலிருந்து வெளிப்படும்படியாக நாம் நடந்து கொள்ள வேண்டும். நாம் வேலை பார்க்கும் இடத்தில், நமக்கு கீழே வேலை செய்பவர்களிடத்தில், நம் குடும்பத்தில் நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? உண்மையான தாழ்மையுள்ளவர்களாக நாம் இருக்கிறோமா? இயேசு கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக, ஒரு அடிமையைப் போல, தன் சீஷர்களின் கால்களை கழுவினார். நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் செய்யுங்கள் என்று கூறுகிறார். நாமும் மற்றவர்களின் தேவையை அறிந்து அதை நிறைவேற்றுகிறவர்களாக, உதவி செய்பவர்களாக, மற்றவர்களின் நோக்கம் நிறைவேற உதவுபவர்களாக மாறவேண்டும். சிலர் தங்களுடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்காகவும், குறிப்பிட்ட வேலைகளை அவர்கள் செய்து தருவார்கள் என்றும், சில மனிதர்களிடம் பழகி அவர்களை பயன்படுத்துவார்கள். இந்த எண்ணத்தை நாம் மாற்றி, மற்றவர்களுக்கு நாம் எப்படி ஆசீர்வாதமாக, உதவி செய்பவர்களாக மாறலாம் என்ற எண்ணம் நமக்குள் வரவேண்டும். மற்றவர்களை வைத்து வேலை வாங்குபவர்களாக, பாரம் சுமத்துகிறவர்களாக அல்ல. மற்றவர்களுக்கு உதவி செய்பவர்களாக நாம் மாறவேண்டும். மற்றவர்களுக்கு ஊழியம் செய்து அவர்களை கிறிஸ்துவண்டை வழிநடத்த வேண்டும். மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களை ஆளுகை

செய்யக்கூடாது. மற்றவர்களை ஆளுகை செய்து சுயநலத்தோடு இருப்பவர்கள்தான் பெருமையுள்ள வர்கள். இவர்கள் பிறரை மதிக்காமல், அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளாமல், மற்றவர்களின் நலன் கருதாமல் தங்களை குறித்து மட்டும் சிந்திந்துக் கொண்டு தாங்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்றநோக்கத்தோடு இருப்பார்கள்.

மனத்தாழ்மை யுள்ளவர்களுக்கு கிருபையை வழங்குகிறார்

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் தங்களுக்குள்ளே யார் மிகவும் பெரியவன் என்று விவாதம் பண்ணினார்கள். இயேசு கிறிஸ்து அவர்களிடம், ''எவனாவது முதல்வனாயிருக்க விரும்பினால், மற்றவர்களைக் காட்டிலும், தன்னை தாழ்த்தக்கடவன், அவன் அனைவருக்கும் வேலைக்காரனாக இருக்க வேண்டும்'' என்றார் (மாற்கு *9:35*). தலைவர்களாக இருப்பவர்கள், அதிகாரம் செலுத்தாமல் அன்பினாலே தனக்குகீழ் இருப்பவர்களை வழிநடத்த வேண்டும். கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள் (ரோமர் *12:10*). மற்றவர்களை உயர்வாக எண்ணும் மனம் நமக்கு வேண்டும். இயேசு கிறிஸ்து ஊழியம் செய்யப்போகும் தன்னுடைய சீஷர்கள் தன்னைப்போல தாழ்மையுடன் அன்புடன் ஊழியம் செய்ய விரும்பினார். தானும் அப்படியே வாழ்ந்து காண்பித்தார். ஒரு அடிமையைப் போல நடந்து கொண்டார். நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல சிந்திக்கவும், செயல்படவும் வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய கிருபையாலே இரட்சிக்கப்பட்டோம் என்பதை உணர்ந்து தாழ்மையோடிருக்கவேண்டும். வேதத்தை நன்றாக அறிந்து வைத்திருப்பவர்களும், அநேக வரங்களை உடையவர்ளும் இவை கர்த்தர் கிருபையாய் கொடுத்தவை என்பதால் தாழ்மையோடு நடந்து கொள்ளவேண்டும்.

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.

- பிலிப்பியர் 2:6,7



இயேசு கிறிஸ்து தேவனைப்போல, அவருக்கு நிகராக இருந்தும், அதைப் பெரிதாக எண்ணாமல், மனிதரைப் போல, வாழ்ந்தார். மனிதராக வாழும்போது, தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தார். மரணம் வரைக்கும், தாழ்மையுள்ளவராக இருந்தார். தேவனின் நோக்கம் நம் வாழ்க்கையில் நிறைவேறவேண்டுமானால், நாம் சுயத்தை, கர்வத்தை பெருமையை சிலுவையில் அறைந்துவிட்டு தாழ்மையோடு இருக்க கற்றுக் கொள்ளவேண்டும். கர்த்தருடைய நோக்கம் நிறைவேற உறுதியாயிருப்போம்.

ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையான வர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

- பிலிப்பியர் 2:3



நாம் செய்யும் எல்லாவற்றையும் உண்மையான தாழ்மையோடும், தாழ்ந்த சிந்தையோடும், இரக்கத்தோடும், கரிசனையோடும் செய்ய வேண்டும் என்றும் மற்றவர்களை மரியாதையோடு, தன்னைவிட உயர்வாக எண்ணும்படி அப்போஸ்தலனாகிய பவுல்கூறுகிறான். மற்றவர்களை விட தம்மை சிறந்தவர்களாக நினைப்பவர்கள் துன்பத்தையே உருவாக்குகிறார்கள். அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும் (நீதிமொழிகள் *13:10*). சுயநலமான எண்ணத்தோடு நாம் காரியங்களை செய்யும்போது, அது நம்மை அழிவுக்கு நேராக கொண்டு செல்கிறது. சுயநலத்தை நம்மைவிட்டு அகற்றி, மற்றவர்கள் மீது அக்கரையுள்ளவர்களாய், அன்புடன் ஆதரவுடன் இருக்கவேண்டும்.. மற்றவர்களின் உணர்வுகளை கவனத்தில் வைத்து, அவர்கள் விருப்பதை கேட்டறிந்து உதவி செய்ய வேண்டும். சுயநலம் நம் வெற்றிக்கு தடையாயிருக்கிறது. நம் இழப்புக்கு அதுவே காரணம்.நம் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் கெடுத்து விடுகிறது. ஆனால், மெய்யான தாழ்மையோ நம்முடைய வளர்ச்சிக்கு காரணமாகிறது. நம்மை உருவாக்கி உயர்த்துகிறது. மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதிமொழிகள் *15:33*). தாழ்மையுள்ளவர்கள் மேன்மையடைவார்கள். மற்றவர்கள் சொல்வதை கவனிப்பார்கள். தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு (நீதிமொழிகள் *11:2*). நம்முடைய ஆஸ்திகள், வேலை, படிப்பு, குடும்பம் தாலந்துகள், அறிவு, அந்தஸ்து எல்லாம் கர்த்தர் நமக்கு கொடுத்தது என்பதை உணர்ந்து கொண்டோமோனால் தாழ்மையோடு கூட இருப்போம். நமக்கு உடல்சுகம் ஆரோக்கியம் எல்லாம் கர்த்தர் கொடுத்தவை.நம் வீட்டிலுள்ள பொருட்கள், பணம் எல்லாம் கர்த்தர் நமக்கு பயன்படுத்த கொடுத்தவை. இதை புரிந்து கொண்டால் தாழ்மையோடு இருப்போம். மாயமான தாழ்மையோடு அல்ல. சிலர் வெளியே தாழ்மையுள்ளவர்களாக காண்பிப்பார்கள். ஆனால், உள்ளத்திலே தாழ்மை இருக்காது. யாருக்குமுன்பாக தாழ்மையாக நடக்கிறார்களோ, அவர்களைக் குறித்த வஞ்சனையான எண்ணம், அவர்களைக் குறித்த வெறுப்பு, கசப்பு, அருவருப்பு அவர்கள் உள்ளத்தில் இருக்கும். ஆனால்,வெளியே அதையெல்லாம் மறைத்துக் கொண்டு, தாழ்மையோடு இருப்பதைப்போல நடிப்பார்கள். உள்ளத்தில் தாழ்மையோடு இருந்தால் கர்த்தர் நம்மை உயர்த்துவார் ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் (மத்தேயு *5:2*).

## பெருமையினால் வந்த அழிவு

அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.

- நீதிமொழிகள் 16:18

யூதாவின் ராஜாவாகிய அமத்சியா கர்த்தரின் பார்வைக்கு பிரியமானவைகளைச் செய்தான். அவன் ஏதோமியரில் பதினாயிரம் பேரைக் கொன்று ஏதோமின் தலைநகரான சேலாவைப் பிடித்தான். அதனால், அவன் பெருமையடைந்து, இஸ்ரவேல் ராஜாவை போர் செய்யும்படி தூண்டினான். அவன் தன்மேலும், தன் ஆற்றல்கள்மேலும் உறுதியான நம்பிக்கை கொண்டான். கர்த்தரை சாராமல் தன்மேல் நம்பிக்கை வைத்து தற்பெருமையினால் வேண்டுமென்றே போரை உண்டாக்கி இறுதியில் தோற்றுப்போனான். அவன் கர்த்தரை சார்ந்திருந்தபோது, கர்த்தர் அவனுக்கு வெற்றியை கொடுத்தார். தற்பெருமை கொண்டதால் பல அழிவுகள் அவனுக்கும், தேசத்திற்கும் வந்தது. இஸ்ரவேல் ராஜா அவனை சிறைப்பிடித்துச் சென்றான். மேலும் எருசலேமில் உள்ள சுவரை நானூறு முழ நீளம் இடித்துப்போட்டு, கர்த்தருடைய ஆலயத்திலும், ராஜாவுடைய அரமனையிலுள்ள வெள்ளியையும், பொன்னையும் எடுத்துக் கொண்டு ஜனங்களையும் பிடித்துக் கொண்டு போனான். பாருங்கள்பெருமை கொண்டதனால் எவ்வளவு பெரிய சேதமும், அழிவும், இழப்புகளும் ஏற்பட்டது.

**பெருமையுள்ள வர்கள் எதிர்பார்த் திருக்கும் காரியம் நடக்காது.**

எந்த காரியத்தையும் மாறுபட்ட குறிக்கோளோடும் சண்டையோடும், விவாதத்தோடும், குறுகிய தன்னல போக்கோடும், தற்பெருமையான சொற்களோடும், வீண் பெருமையோடும், தன் மீதும், தன் திறமைகள் மீதுமுள்ள நம்பிக்கையோடும் செய்யக்கூடாது. தனது தோற்றத்தைக் குறித்தும் தன்னுடைய ஆற்றல்களைக் குறித்தும் வீணாக அளவுக்கு மீறி தற்பெருமை கொள்ளாமல், இறுமாப்போடு இருக்காமல் ஒருவருக்கொருவர் போட்டி போடாமலும், சவால் விடாமலும், சொல்லாலும் அல்லது செயலாலும் மற்றவர்களை வேண்டுமென்றே கலங்கப்பண்ணி கோபத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்காமல் எரிச்சல்படுத்தாமல், தான் விரும்பும் ஒன்று வேறொருவரிடம் இருக்கும்போது அதைப் பார்த்து தனக்கு வேண்டும் என்று ஆசைப்படாமல் பொறாமை கொள்ளாமல் இருக்கவேண்டும்.

பெருமையுள்ளவர்கள் எதிர்பார்த்திருக்கும் காரியம் நடக்காது.அவர்கள் விரும்பிய காரியத்தை நிறைவேற்ற முடியாதபடி அவர்கள் எதிர்பாராத விதத்தில் தடைகள் வரும். மற்றவர்களைவிட தங்களை பெரிதாக நினைப்பதால் அவர்கள் எளிதாக விழுந்துவிடுவார்கள்.மேட்டிமைதான் அவர்களது உயர்வுக்கு தடை என்பதை உணர்ந்து கொண்டு மனந்திரும்பினால் கர்த்தர் அவர்களை உயர்த்துவார்.

> அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை.
>
> - நீதிமொழிகள் 18:12

நாம் எந்த சூழ்நிலையிலும் பெருமைக்கு இடங்கொடாதபடி, தாழ்மையோடு இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான் (நீதிமொழிகள் *29:23*). கர்த்தருடைய கிருபையும், தயவும், இரக்கமும் இல்லாவிட்டால,, நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் நிர்மூலமாகாமல் உயிரோடு இருப்பது, கர்த்தருடைய கிருபையாலே எனபதை உணர்ந்து கொண்டால், நம்மை நாமே உயர்வாக நினைக்கவும் பேசவும் மாட்டோம்.

இயேசு கிறிஸ்து சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தினபடியால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். இயேசுவின் நாமத்தில், பரலோகத்திலும், பூலோகத்திலும், பூமிக்கு கீழுள்ள உலகத்திலும் உள்ளவர்கள் அவரை பணிந்து கொள்ளும்படிக்கும், இயேசு கிறிஸ்துவே, நமது கர்த்தர் என்றும் அனைவரும் அறிக்கை செய்யும்படிக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு கொடுத்தார்.

## பெருமையினால் வரும் இழப்பு

> பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் நான் (கர்த்தர்) வெறுக்கிறேன்.
>
> - நீதி மொழிகள் 8:13

துன்மார்க்கன் பெருமை நிறைந்தவன் (சங்கீதம் *10:24*). தீய ஜனங்கள் அவர்கள்



இச்சித்ததை பெற்றதனால், அதைக் குறித்து பெருமை கொண்டு, பேராசையோடு இருப்பார்கள். அவர்கள் தேவனை புறக்கணித்து அவரோடு தொடர்பு கொள்ள விரும்பாமல் அவரை வெறுப்பார்கள். தேவனே இல்லை என்பது போல நடந்து கொள்வார்கள். அவர்கள் விரும்பியது கிடைக்க எந்த தவறையும் செய்ய தயங்கமாட்டார்கள. ஆனால், அவர்கள் இச்சித்தத்தை பெற்றுக் கொண்டாலும் சமாதானமாக இருக்க முடியாது.

> தங்கள் செல்வத்தை நம்பி, தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமை பாராட்டுகிற..
>
> - சங்கீதம் 49:6

ஏராளமான சொத்துக்களையும், பணத்தையும் பொருட்களையும் குறித்து வீணாக பெருமை பேசிக் கொண்டு, பணமும், ஆஸ்திகளும், தங்களை பாதுகாக்கும் என்று அநேகர் அதை நம்பி இருக்கிறார்கள். அது அவர்களுக்கு சுகம் தராது. எவ்வளவு சொத்துக்களையும் பணத்தையும், பொருட்களையும் வைத்திருந்தாலும் இந்த பூமியிலே நிரந்தரமாக வாழ முடியாது. மரிக்கும்போது அந்த சொத்தை, அவர்களோடு கூட எடுத்துச் செல்ல முடியாது. இப்படி பண ஆசையோடு, பெருமையோடு வாழ்பவர்கள் பரலோகத்துக்கு செல்ல முடியாது. எவ்வளவு பணம், ஆஸ்திகள் இருந்தாலும், ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை என்றால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட்டாலொழிய ஆத்துமா இரட்சிப்படைய முடியாது. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு *8:36*).

> மனுஷன் தன்னுடைய செய்கையை விட்டு நீங்கவும், மனுஷனுடைய பெருமை அடங்கவும் செய்கிறார்.
>
> - யோபு 33:17



யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தான். அவன் கர்த்தரை நோக்கி ஜெபித்தபோது கர்த்தர் அற்புதமாக சுகம் கொடுத்தார். அவனது ஆயுசு நாட்களோடு பதினைந்து ஆண்டுகள் கூட்டிக் கொடுத்தார். கர்த்தர் தனக்கு கொடுத்த சுகத்தை நினைத்து, அவருக்கு நன்றி சொல்லவில்லை. தனக்கு செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான். (2 நாளாகமம் *32:25*). எசேக்கியா பாபிலோனி லிருந்து தன்னை காண வந்த ஜனங்களை வரவேற்று, தன் வீட்டில் உள்ள விலை மதிப்புள்ள பொருட்களையெல்லாம் அவர்களுக்குக் காட்டினான்.தன் அரண்மனையிலும், தன் ராஜ்ஜியத்தில் எங்கும் அவன் அவர்களுக்குக் காட்டாத பொருள் எதுவுமில்லை. அவனுக்கு கர்த்தர்தான் சுகம்கொடுத்தார் என்பதை அவர்களுக்கு சொல்லவில்லை. கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் இவ்வாறாக பேசினார்:‘‘உன்னாலும், உன் முற்பிதாக்களாலும், சேமித்து, வைக்கப்பட்ட எல்லாம் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படும்; உன் குமாரர்கள் பாபிலோன் ராஜாவின் அரண்மனையில் வேலைக்காரராயிருப்பார்கள்’’ என்றான். கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக சொன்னது நடந்தது. கர்த்தர்

ஏசேக்கியாவுக்கு மகா திரளான ஆஸ்தியைக் கொடுத்து அவனை ஆசீர்வதித்தார். ஏராளமான செல்வமும், சிறப்பும் அவனுக்கு இருந்தது. கர்த்தர் மனம் இரங்கி சுகத்தையும், ஆயுசு நாட்களையும் கொடுத்ததை மறந்து பெருமையடைந்தான். சுகமும், ஆயுளும் கொடுத்த கர்த்தரை குறித்து மேன்மை பாராட்டாமல், தன்னிடம் இருந்த பொருட்களை குறித்து மேன்மை பாராட்டிக் கொண்டிருந்தான். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்தும்போது, நமக்கு கர்த்தர் கொடுத்த ஆஸ்திகளையும், பொருட்களையும் குறித்து மேன்மை பாராட்டாமல் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம்.

## பதவியை பறித்த பெருமை

**இச்சகம் பேசுகிற எல்லா உதடுகளையும் பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப் போடுவார்.**

- சங்கீதம் 12:3

பிறரை மகிழ்விக்கும்படியான எண்ணத்துடன் அவர்களிடம் இனிமையாகப் பேசி, மனதார அவர்களை பாராட்டாமல் முகஸ்துதி செய்பவர்களையும், பெருமைப்பேசிக் கொண்டிருக்கிற எல்லா நாவையும் கர்த்தர் அவர்கள் பெருமைப் பேசாதபடி அவர்கள் வாயை அடைத்துப்போடுவார். நாவானது சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப் பேசும் (யாக்கோபு 3:5) வாயின் வார்த்தைகளில் கவனமாயிருப்போம். ராஜாவாகிய நெபுகாத்நேச்சார் உலக அதிசயங்களில் ஒன்றான பாபிலோனைக் கட்டினார். அதனால் அவன்பெருமை கொண்டு ''இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்திற்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா'' என்று சொன்னான் (தானியேல் 4:30). இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே வானத்திலிருந்து ''ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று'' என்ற ஒருசத்தம் உண்டாயிற்று. அப்பொழுதே அவன் மனுஷரிடமிருந்து தள்ளப்பட்டு மாடுகளைப் போல புல்லை உண்ணத் தொடங்கினான். அவனுடைய இருதயம் மிருகங்களுடைய இருதயம் போலாயிற்று. ராஜா அகந்தையும், கடின மனமும் கொண்டதால், அவனது வல்லமையும், மகிமையும் அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. ராஜ்யபாரம் அவனை விட்டு போயிற்று. கர்த்தரே ராஜ்யங்களை ஆளுகை செய்கிறவர். அவர் தமக்கு சித்தமானவர்களுக்கு ராஜ்யங்களை கொடுக்கிறார் என்பதை நேபுகாத்நேச்சார் உணரும் வரை மிருகத்தை போலிருந்தான். கர்த்தர் அவனுக்கு சொப்பனத்தின் மூலமாக எச்சரிக்கை கொடுத்தும் அவன் மனந்திரும்பாததால் தேவனுடைய தண்டனை அவன் மேல்வந்தது. அவன் மனந்திரும்பி தேவனை நோக்கிப் பார்த்தபோது, அவன் புத்தி தெளிந்து உன்னதமான தேவனை ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்தினான். தேவனே என்றென்றும் அரசாளுகிறவர் அவரது ராஜ்யம் எல்லா தலைமுறைகளுக்கும் தொடரும். தேவன் என்ன செய்ய விரும்புகிறாரோ அதையே





செய்கிறார். அதை கேள்வி கேட்க யாராலும் முடியாது. பாருங்கள் பிரியமானவர்களே, ராஜா தான் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து கொண்டான். கர்த்தரே ஆளுகை செய்கிறவர், சகல அதிகாரமும் அவருடைய கரத்தில் உள்ளது என்று தேவனை உயர்த்தி அவரை போற்றி, அவருக்கு கனத்தையும், மகிமையையும் செலுத்தினான். அவன் முகரூபம் மாறி மறுபடியும் மிகச்சிறந்த ராஜாவாக உயர்த்தப்பட்டான். அவன் தன்னைத் தாழ்த்தினபோது, கர்த்தர் அவனை உயர்த்தினார். கர்த்தர் ஒரு மனிதனுக்கு ஒரு நல்ல ஸ்தானத்தை கொடுத்து விட்டால், அந்த மனிதன் பெருமையடைந்து விழுந்து போகிறான். கர்த்தருக்கு முன்பாக நிற்பதற்கு நாம் எவ்வளவும் தகுதியற்றவர்கள் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அப்பொழுது தாழ்மை நமக்குள் வரும்.

> **கர்த்தருக்கு முன்பாக நிற்பதற்கு நாம் எவ்வளவும் தகுதியற்றவர்கள் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்**

கர்த்தரால் படைக்கப்பட்ட தேவதூதனாகிய லூசிபர் தேவனைப் போலாக வேண்டுமென்று ஆசைப்பட்டு பெருமையடைந்து அவருக்கு எதிர்த்து நின்றான். அதனால் தேவன் அவனது ஸ்தானத்திலிருந்து தள்ளிவிட்டார். அவனே சாத்தான்என்றும், அவனுக்கு கீழிருந்த தேவதூதர்கள் பிசாசுகளாக, அசுத்த ஆவிகளாக இருக்கின்றன. அவன் தான் மனிதருக்கு பாவத்தின் மேல் கவர்ச்சியை, ஆசையைக் காட்டி பாவம் செய்ய தூண்டுகிறான். இச்சையையும், பெருமையையும் கொண்டு வந்து, தனக்கு கீழ்ப்படியச் செய்கிறான். எல்லா மனிதர்களையும் சோதனைக்கு உட்பட வைத்து தேவனிடத்திலிருந்து விலகிச் செல்ல முயற்சிக்கிறான். பிசாசுதான் பெருமை கொள்ள வைக்கிறான் சுயநலத்தை தூண்டுகிறான். நாம் பிசாசுக்கு இடம் கொடுப்பதும், கொடாததும் நமது கரத்தில்தான் உள்ளது. தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற தேவனுடைய நீதியின்படி நம்மை தாழ்த்துவோம். பெருமையை நம்மைவிட்டு அகற்றிபோடுவோம். தேவன்தாமே உங்களை உயர்த்துவாராக. ஆமென்!

◈◈◈






**க**ர்த்தர், தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு தெரிந்தெடுத்த மனிதர்களில் நெகேமியாவும் ஒருவர். நெகேமியாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு. சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

1. ஜெபம் என்பது உபவாசத்தோடு எப்போதும் இணைந்திருக்கிறது.

2. கர்த்தரின் விருப்பத்தை செய்ய முடிவு செய்யுங்கள்; அவரின் விருப்பம் நிறைவேறுவதற்கு அவரையே முழுவதுமாக நம்புங்கள்.

3. நெகேமியா எப்படியெல்லாம் செயல்பட்டான் என்பதைப் பாருங்கள். எப்படி கர்த்தர் அவனைச் சார்ந்து தமது காரியங்களைச் செய்தாரோ, அப்படிப்பட்ட மனிதராக இருங்கள்.

4. கர்த்தர், மதில்களை மீண்டும் எடுத்து கட்டும்படியான வாஞ்சையை நெகேமியாவின் இருதயத்தில் வைத்தார். அந்த வேலைக்கான தரிசனத்தை அவனுக்குக் கொடுத்தார்.

5. பிரச்சனைகளுக்கு ஜெபத்தின மூலம் பதில் செய்தான். அவன் வேலையைத் தொடங்கியபொழுது பிரச்சனைகளை அறிந்து கொண்டான். உடனே ஜெபித்தான். அதன்பிறகே செயல்பட்டான் (அந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு).

6. இன்றைக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான கர்த்தருடைய வல்லமை, ஜெபத்தின் மூலமே வெளிப்படுகிறது. ஜெபமும், செயல்பாடும் கையோடு கைகோர்த்து செல்வதுபோல. ஜெபத்தின் மூலமாக கர்த்தர் நமக்கு வழிகாட்டுகிறார் (நம்மை உருவாககுவதற்கு, நமக்கென்று இணைந்து செயல்படும்படி ஒரு குழுவை உருவாக்குவதற்கு, உறுதியான முயற்சிகளை எடுத்து அவருடைய சித்தத்தை செய்வதற்கு).

7. நெகேமியா ஒரு தலைவனுக்கான மிகச் சிறந்த உதாரணமாக இருக்கிறான். கர்த்தருடைய அழைப்பைத் தெரிந்து கொள்வதில் ஆவிக்குரிய ரீதியில் தயார்நிலையில் இருந்தான். மிகவும் கவனமாகத் திட்டமிட்டான், ஒரு குழுவாக செயல்பட்டான், தைரியமாக வேலையைச் செய்தான். அவன், விசுவாசத்தில் மேம்பட்டவனாக இருந்தபோதும் ஒரு தலைவன் என்ற முறையில் செய்ய வேண்டிய அதிகமான வேலையை புறக்கணிக்கவில்லை.



8. கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவன் என்பது, வெறுமனே அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஸ்தானத்தைப் பெறுவது அல்ல. அப்படிப்பட்டவன் திட்டமிடுகிறவனாக, கடின உழைப்பாளியாக, தைரியமுள்ளவனாக, பொறுமையுள்ளவனாக இருக்கவேண்டும். வெறும் நேர்மறையான எதிர்பார்ப்புகள் போதாது. மற்றவர்களை வழிநடத்த, நீங்கள் உங்களது சொந்த வாழ்க்கையில் கர்த்தருடைய வழிகளைக்கேட்டு நடப்பவர்களாக இருக்க வேண்டும்.

9. வேலையை ஆரம்பித்த பிறகு நெகேமியாவிற்கு, எதிர்ப்புகள், பயமுறுத்தல்கள், ஏளனங்கள் வந்தது. இவையெல்லாம் அவனைத் தடை செய்யவில்லை. நாம் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு, மேற்கொண்டு வெற்றிபெறவேண்டும்.

10. நம்மோடு இருப்பவர்கள், ஆவிக்குரிய வளர்ச்சியடைய வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்குப் போதிக்கவேண்டும். அப்போது அவர்கள் ஆவியில் வளருவார்கள். கர்த்தர் நம் வாழ்வின் மையமாக இருக்கவேண்டும்.

★★★

*உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?*

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

*உள்நாட்டு வருட சந்தா* ரூ. 200/-

*வெளிநாட்டு வருட சந்தா* ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI *வங்கி கணக்கின் பெயர் :* **S.PAULRAJ KENNEDY**

**ICICI** *வங்கி கணக்கு எண் : 0350 0150 7744*

*எங்களது முகவரி :* எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com** இணைய தளம் : **www.kennedyministries.org**






**www.awmi.net**

**நா**ம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காரியத்தைத் தவறாக செய்துவிட்டு, அதன்பின்பு, ''எனக்குத் தெரியும் நான் தவறான காரியத்தை செய்துவிட்டேன்'' என்று சொல்கிறோம். நமது தீர்மானம் சரியானது அல்ல என்பதை உணர்கிறோம். காரண காரியங்களையும், சூழ்நிலையின் அழுத்தத்தையும் வைத்து முடிவு எடுத்துவிடுகிறோம்.

நாம், நம்மை முழுவதுமாகக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கும்போது, அவர், அவருடைய தேவைகளையும் வாஞ்சைகளையும் நம் உள்ளத்தில் வைக்கிறார்.

நமது சுய விருப்பு, வெறுப்புகள் போகவேண்டும். அப்பொழுதுதான் கர்த்தருடைய ஆவியானவரால் நம்மோடு தொடர்பு கொள்ள முடியும். அந்நிய பாஷைகளில் பேச வேண்டும். அப்போது கர்த்தருடைய ஆவியானவர் நம்முடன் எளிதாக இடைபட முடியும்.

கர்த்தருடைய ஆவியானவர் காட்டும் பாதை விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். ரோமர் *14:23* சொல்கிறது: விசுவாசத்தினால் வராத எதுவும் பாவம். கர்த்தருடைய ஆவியானவர் நமக்கு காட்டும் பாதையை, நாம் நம்மோடு இருப்பவர்களிடம் சொல்லும்போது, அவர்கள் அதை அறிந்துகொள்ள முடியாது. அதை எதிர்த்து நிற்பார்கள். அதனால் நாம் முடிவு எடுக்காமல் இருக்கக்கூடாது.

கர்த்தருடைய ஆவியானவர், வேதத்தின் வார்த்தையைக்கொண்டு நமக்கு வழி காட்டுவார். கொலோசெயர் *3:15* சொல்கிறது: தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. ஆம், பரிசுத்த ஆவியானவரால் நாம் நடத்தப்படும்போது நமக்கு சமாதானமாக இருக்கும்.

நான் படித்துக்கொண்டிருக்கும்பொழுது, ஆவியானவர் அந்த படிப்பை



விட்டுவிட்டு ஊழியத்திற்கு வரும்படி அழைப்பதாக என் ஆவியில் உணர்ந்தேன். இதை என் தாயிடம் சொன்னபொழுது, என்னுடன் கோபித்துக்கொண்டு என்னோடு பல நாட்கள் பேசாமலே இருந்தார்கள். ஏனென்றால், படிப்பதற்காக எனக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும் அரசாங்க உதவித் தொகை நின்றுபோகும். அதனால், நான் முடிவெடுக்க முடியாமல் இருந்தேன். என்னுடைய சமாதானத்தை இழந்து, தவித்தேன். இரண்டு மாதங்களுக்கு இது தொடர்ந்தது. ஒருநாள் இரவு, கர்த்தர், வேத வார்த்தையின் மூலம் என்னோடு பேசினார். அப்போது நான் முடிவெடுக்காமல் இருப்பது பாவம் என்று உணர்ந்தேன். விசுவாசத்தினால் நடப்பது என்று முடிவு செய்தேன். அந்த முடிவின்படி நான் நடந்தபோது, மிகுந்த சமாதானமடைந்தேன். அன்று நானெடுத்த அந்த முடிவு என் வாழ்க்கையையே மாற்றியது.கர்த்தரின் ஞானம் குறித்து இன்றுவரை எனக்கு எந்தவிதத்திலும் சந்தேகம் எழவில்லை. இன்று நான் வாழும் இந்த வெற்றிகரமான வாழ்க்கைக்கு அந்த முடிவுதானே காரணம்.

நமது கிருபையுள்ள பரம தகப்பன், எல்லோரிடமும் தொடர்ந்து பேசிக் கொண்டுதானிருக்கிறார். நமது சூழ்நிலைகளுக்கேற்ப, அதை மேற்கொள்ளும் படியான ஆலோசனைகளையும், வழிகளையும் கொடுத்துக் கொண்டு தானிருக்கிறார்.

அவர் நம்முடன் பேசிக் கொண்டுதான் இருக்கிறார். நாம்தான் கேட்பதற்கு ஆயத்தப்பட வேண்டும்.

◈◈◈



# நீ என்னால் மறக்கப்படுவதில்லை

எல்.பால்ராஜ் கென்னடி

என்னை நேசிப்பதற்கு யாருமில்லையா? இதுதானே உங்கள் யோசனை. உங்கள் யோசனையை கர்த்தர் அறிவார். மனுஷன், முகத்தைப் பார்ப்பான்; ஆனால், கர்த்தரோ, உங்களது இருதயத்தின் எண்ணங்களை, நோக்கங்களை, ஏக்கங்களை, ஏங்கல்களை,வியாகுலங்களைப் பார்க்கிறார். மனுஷன், தன்னைப்பற்றி (தன்னுடைய நலத்தைப்பற்றி) யோசிக்கிறான். ஆனால், கர்த்தரோ,உங்களது நலத்தைப்பற்றி யோசிக்கிறார்.

> நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத் துக்கேதுவான நினைவுகளே.
>
> - எரேமியா 29:11

பாருங்கள், எனக்குப் பிரியமான சகோதர, சகோதரிகளே, நீங்கள் எதை எதிர்பார்த்திருக்கிறீர்களோ, அதை உங்களுக்குக் கொடுப்பதற்காகக் கர்த்தர் யோசித்துக் கொண்டிருக்கிறார். அந்த யோசனை உங்களுக்கு தீமையைத் தராது; சமாதானத்தையே தரும் என்று உறுதியளிக்கிறார்.

உங்கள் நண்பர்கள், உங்களை மறந்து போகலாம். உங்களது சொந்த பந்தங்கள் உங்களை புறக்கணிக்கலாம். உங்களது தாய், தகப்பன்கூட உங்களை நேசிக்காமல் போகலாம். ஆனால், உங்களை உருவாக்கின தேவன், ஒருபோதும் உங்களை மறந்துபோவதில்லை.

> யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை; நீ என் தாசன்; நான் உன்னை உருவாக்கினேன்; நீ என் தாசன்; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை.
>
> - ஏசாயா 44:21



யாருமே என்னை நினைக்கவில்லை என்று எண்ணி சோர்ந்து போகாதீர்கள். உங்களது பரம தகப்பன் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறார். அக்கினியின் நடுவில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவோடு இருந்த தேவன், சிங்கக் கெபியில் தானியேலோடு இருந்த தேவன், சிறைச்சாலையில் யோசேப்போடு இருந்த தேவன், உங்களோடு இருக்கிறார், ஒருபோதும் உங்களை கைவிடார்.

இது கடைசிக்காலம். அதன் அடையாளமே அன்பு தணிந்து போயிருப்பதாகும். அன்பை உருவாக்கின தேவன், அன்பைப் பற்றி என்ன சொன்னார்? முதலாவது தேவனிடத்திலும், அதற்கு இணையாக மற்ற மனுஷரிடத்திலும் அன்புகூருங்கள் என்றார். அதிலும் குறிப்பாக உன்னைப்போல பிறனையும் நேசி என்றார். ஆனால், மனுஷன் தன்னை நேசிப்பதோடு நிறுத்திக் கொண்டான். ஏன் மனுஷ அன்பை நாடித் தேடுகிறீர்கள்? மனுஷனுடைய அன்பு மாறிப்போகும். இன்றைக்கு உங்களை நேசிக்கிறவர்கள் உங்கள் மீது வைத்திருக்கிற அன்பு நிரந்தரமானதா? அந்த மனிதர்களே நிரந்தரமானவர்களல்ல, அப்படியானால் அவர்களுக்குள் உள்ள அன்பும் நிரந்தரமானதல்ல. கர்த்தர், உங்கள்மேல் வைத்திருக்கிற அன்பு மாத்திரமே நிரந்தரம். அவருடைய அன்பு நேற்றும், இன்றும், என்றும் மாறாதது. தம்மையே ஜீவ பலியாக உங்களுக்காக ஒப்புக் கொடுத்த அவருடைய அன்புக்கு நிகர் எதுவும் இல்லை. ஒரு குறையும் இல்லாத அந்த பரிபூரணமான அன்பை எண்ணிப் பாருங்கள். தேவன், அன்பாகவே இருக்கிறார் (*1 யோவான் 4:8,16*).

> **உங்களது சூழ்நிலை, உங்களின் மனநிலை எல்லாவற்றையும் உங்கள் பரம தகப்பன் அறிவார்**

நமக்காக மனதுருகுகிற பரம தகப்பன் நம்மோடு எப்போதும் இருக்கிறார். உங்களது சூழ்நிலை, உங்களின் மனநிலை எல்லாவற்றையும் உங்கள் பரம தகப்பன் அறிவார். உங்களுக்கு இன்னது தேவை என்பதை நீங்கள் அவரிடம் கேட்பதற்கு முன்னமே அறிவார் (மத்தேயு 6:8). நீங்கள் எந்த மனுஷனுக்கும், எந்த சூழ்நிலைக்கும் அடிமை இல்லை. இயேசு என்றால் இரட்சிப்பு என்று அர்த்தம். எந்தவிதமான சூழ்நிலையிலிருந்தும் இயேசு கிறிஸ்து உங்களை விடுதலை பண்ணுவார். கவலைப்படாதிருங்கள், உங்களை உண்மையாய் நேசிக்கிற உங்கள் பரம தகப்பன், உங்களோடிருக்கிறார்.

உங்களது பரம தகப்பனின், அன்பும், இரக்கமும், கிருபையும், தயவும் யாருக்காக? உங்களுக்காகவே. ஆமென்!

◈◈◈